தமிழ் வளர்ச்சித்துறை
அரசினர் பொறியியல் கல்லூரி
செங்கிப்பட்டி, தஞ்சாவூர்.
30. 11 . 2023

**முதல்வர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது**

**பொருள்:** முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நமது கல்லூரி மாணவர்களுக்கு நடைபெற்ற பேச்சுப்போட்டிக்கான அறிக்கை சமர்ப்பித்தல் - தொடர்பாக

**பார்வை:** முதல்வரின் செய்முறை ஆணை எண். 2655/ எஸ் 2/ 2023 நாள் 21. 11. 2023.

பார்வையில் காணும் முதல்வரின் செயல்முறை ஆணைக்கிணங்க, அரசினர் பொறியியல் கல்லூரி, செங்கிப்பட்டி தஞ்சாவூரில் 28. 11. 2023 அன்று காலை 11 மணி அளவில் மாணவர் தமிழ் மன்றம் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை இணைந்து நடத்தும், கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கான கல்லூரி அளவிலான பேச்சுப்போட்டி நடத்தப்பட்டது. போட்டியில் துவக்கமாக தமிழ் வளர்ச்சி துறை பொறுப்பாளர் முனைவர் க கலைமதி அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். இதனை தொடர்ந்து **முதல்வர் முனைவர் சு. ஜெயபால்** ஐயா அவர்கள் மாணவர்களுக்கு தமிழின் முக்கியத்துவத்தையும், மாணவர்கள் தமிழின் மேல் உள்ள ஆர்வத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், மேலும் கலைஞர் முனைவர் மு கருணாநிதி ஐயா அவர்கள் தமிழ் மீது வைத்திருந்த பற்றை பற்றியும், மாணவரிடம் எடுத்து கூறி விழாவை துவங்கி வைத்தார்கள். விழா மூன்று திறமை வாய்ந்த நடுவர்கள் முன்னிலையில் துவங்கப்பட்டது. பேராசிரியர் S. A. T. சண்முகப்ரியா (வேதியியல் துறை), பேராசிரியர் மனோஜ்குமார் (கணினி அறிவியியல் துறை) மற்றும் முனைவர் சிவசங்கர் (இயந்திரவியல் துறை). சிவசங்கர் ஐயா அவர்கள் போட்டிக்கான விதிமுறைகளை எடுத்துரைத்தார்கள் . போட்டிக்கு ஐந்து நிமிட கால அவகாசம் ஒரு மாணவனுக்கு வழங்கப்பட்டது, அதில் **தலைப்புகள்**

1. கலைஞரும் – தமிழும்
2. கலைஞரும் - சமூக நீதியும்,
3. கலைஞரும் - அரசியல் அதிகாரமும்
4. கலைஞரும் - பெண்ணுரிமையும்
5. கலைஞரும் - அறிவியல் தொழில்நுட்பமும்.

மொத்தமாக 20 மதிப்பெண்கள் வழங்கப்பட்டது (உச்சரிப்பு, கருத்து, கூறும் விதம் மற்றும் மேற்கோள்) இறுதியாக எட்டு மாணவர்கள் கலந்து கொண்டார்கள். அதில் முதல் பரிசு **கா ஹரிணி** (மூன்றாம் ஆண்டு மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை) இரண்டாம் பரிசு **அ. ஹரிப்பிரியா** (முதலாமாண்டு இயந்திரவியல் துறை) மூன்றாம் பரிசு **வி ஹரிவர்த்தினி** (இரண்டாம் ஆண்டு இயந்திரவியல் துறை) வெற்றி பெற்றார்கள். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்துக்கள் கூறி சான்றிதழை முதல்வர் முனைவர் சு. ஜெயபால் ஐயா அவர்கள் வழங்கினார்கள். மேலும் நடுவர்களுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.

இறுதியாக தா. பாலமுருகன் (இரண்டாம் ஆண்டு மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை) அவர்கள் நன்றியுரை கூறி விழா இனிதே நிறைவுபெற்றது. என்பதை முதல்வர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் பரிசுபெற்ற மாணவர்களுக்கு பரிசு தொகையை வழங்க ஏதுவாக இவ்விழாவிற்கான அறிக்கையை தொழில் நுட்பக்கல்வி

Scanned with CamScanner

இயக்ககத்திற்கு (Hard and Soft copy மின்னஞ்சல் முகவரி (socdc.dote@tn.gov.in)) சமர்ப்பிக்குமாறு முதல்வர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

30/11/2023

தமிழ் வளர்ச்சி பொறுப்பாளர்

க. கலைமதி (உ. பே /வேதியியல் துறை)

## நிகழ்ச்சி நிரலின் புகைப்படம்












Scanned with CamScanner












Scanned with CamScanner










Scanned with CamScanner